ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

**Ministry of Disaster Management**

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

# 2013

# பொருடக்கம்


| | |
|---|---|
| 1. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | பக்கம் |
| 1.1 அறிமுகம் | 03 |
| 1.2 நோக்கு | 03 |
| 1.3 அரும்பணி | 03 |
| 1.4 குறிக்கோள்கள் | 04 |
| 1.5 பணிகள் | 04 |
| 1.6 செயற்பாட்டுக் கட்டமைப்பு | 05 |
| 1.7 பொது விடயங்கள் | 06 |
| 1.8 அமைச்சுக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | 06 |
| 1.9 அமைச்சின் தாபனக் கட்டமைப்பு | 07 |
| 1.10 அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை | 08 |
| 02. நிருவாக நடவடிக்கைகள் | 08 - 17 |
| 03. திட்ட மற்றும் அபிவிருத்தி நடவடிக்ககைகள் | 18 - 20 |
| 04. கணக்கீட்டு நடவடிக்கைகள் | 21 - 22 |
| 05. கொள்வனவு நடவடிக்கைகள் | 23 |
| 06. அகக் கணக்காய்வு நடவடிக்கைகள் | 24 |
| 07. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் | 25-39 |

## 1.1 அறிமுகம்

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

இலங்கைவாழ் மக்கள் முன்னொருபோதும் சந்தித்திராத நிகழ்வாக, 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை, அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறுவதற்கு காரணமாயிற்று. இப்பேரழிவினால் 05 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம்பெயரவேண்டிய நிலை உருவானது.

இவ்வாறான உயிர்ச்சேதங்கள், பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகத்திற்கு அதனாலான தாக்கம் தொடர்பில் நலனோம்புகைப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பிற்கு உரிய முறைவழி மற்றும் சட்டரீதியான ஒரு கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. எனவே, இதுபோன்ற அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான நிறுவன மற்றும் சட்டரீதியான கட்டமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்றத் தெரி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த தெரி குழுவின் சிபாரிசுகளின்படி 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும், அனர்த்த முனாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பெற்றன. இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சானது, 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது. அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இரண்டாவது பதவி காலத்திற்கான சத்தியபிரமாணம் செய்துகொண்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக மாண்புமிகு மஹிந்த அமரவீர அவர்களும், பிரதி அமைச்சராக மாண்புமிகு டுலிப் வீஜேசேகர அவர்களும் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளராக திருமதி. எஸ். எம். மொஹமட் மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்

## 1.2 நோக்கு

***"பாதுகாப்பானதோர் இலங்கை"***

## 1.3 இலட்சியப் பணி

***"இலங்கையில் இயற்கையாக அல்லது மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழும் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான தாக்கங்களை பயன்தரும் வகையில் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் மூலம் சுபிட்சமானதும் உன்னதமானதுமான வாழ்க்கை முறையை உறுதி செய்தல்".***

1.4 **குறிக்கோள்கள்**

அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சின் நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ள மூன்று பிரதான பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

- ❖ மக்கள், உடைமைகள் மற்றும் சேவைகளை அனர்த்தங்களினின்று பாதுகாத்தல். (தடுத்தல், கட்டுப்படுத்தல், முன்ஆயத்தம் மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்)

- ❖ உன்னதமான ஒரு சமூகத்திற்கென மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல். (முன்னெச்சரிக்கை, அசவர நடவடிக்கைகள், மீட்புப் பணிகளும் நிவாரணப் பணிகளும்)

- ❖ பின் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தல். (இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் புனர்வாழ்வளிப்பும் மறுசீரமைப்பும்)

1.5 **பணிகள்**

இந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அமைச்சிடம் கீழ் வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ❖ இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களின்போது நிவாரணம் வழஙகும் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தலும் இணைப்பாக்கம் செய்தலும்.

- ❖ அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் வழமை நிலைக்குக் கொண்டு வருதல் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்ளைத் தயாரித்தல்.

- ❖ சம்பந்தப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான தேசியத் திட்டங்ளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்திட்டங்களையும் அதிகாரிகளுடன் உடன்பட்டுக்கொண்ட கால எல்லை மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வளங்களுக்கமைய நடைமுறைப்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

- ❖ தேசியக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தையும், அவசர நிலைமைகளில் தொழிற்படுத்தும் திட்டங்களையும் தயாரித்தல்.

- ❖ அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்கொள்ளுதல் மற்றும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் இணைப்பாக்கம் செய்தல்.

- ❖ மேற்படி பணிகள் உரிய நேரத்தில் நடைபெறுவதை உறுதி செய்து கொள்வதற்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைப்பாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- ❖ இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை இணைப்பாக்கம் செய்தல்.

- ❖ வெள்ளப்பெருக்கு, வரட்சி, கொள்ளை நோய்கள் உட்பட்ட ஏனைய விசேட காரணங்களால் ஏற்படும் அனர்த்தங்களின்போது நிவாரணம் வழங்குதல்.

- ❖ இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகளின்போது மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

- ❖ அனர்த்த முன்னெச்சரிக்கை கட்டமைப்புகளை செயற்படுத்தல்.

- ❖ வீடுகள், கட்டட நிர்மாண தொழிற் துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்.

- ❖ வானிலை தொடர்பான மதிப்பீடுகளும் ஆராய்ச்சிப் பணிகளும்.

- ❖ அமைச்சின் கண்காணிப்பில் இயங்கும் நிறுவனங்களில் ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்தல்.

1.6 **செயற்பாட்டுக் கட்டமைப்பு**

இந்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

- ❖ வளிமண்டலவியல் திணைக்களம்
- ❖ அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- ❖ தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மை
- ❖ தேசிய அனாத்த நிவாரண சேவைகள் நிலையம்

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் அமைச்சின் ஒரு பிரிவாக செயற்படுகின்றபோதும், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மை அத்துடன் அனர்தத முகாமைத்துவ நிலையம் ஆகிய நிறுவனங்கள் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வெவ்வேறு நிறுவனங்களாக செயற்படுகின்றன.

அமைச்சின் நேரடியான மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் வசதிகளின் கீழ் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் 2013 ஆம் ஆண்டு முழுவதிலும் கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- ✓ பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குதல்

- ✓ அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கான கருத்திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் (மழைநீர்த் தாங்கி அமைத்தல் போன்ற)

- ✓ இயற்கை மற்றும் மனிதனின் செயற்பாடு காரணமாக நிகழும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ வரட்சியால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீர் வினியோகம் மற்றும் வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ அனர்த்த நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

- ✓ அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் விதம் மற்றும் நிவாரணப் பொறிமுறை தொடர்பாக அரச அலுவலர்களையும் பொதுமக்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ திடீர் அனர்த்த நிலைமையொன்றில் நிவாரண நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்

- ✓ ஏற்பாட்டுச் சேவைகளை வழங்குதல்

## 1.7 பொது விடயங்கள் :


வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தினால் இலங்கையில் அனர்த்தங்களை எதிர்கொள்ளும், பாதிக்கப்படும் எண்ணிக்கை உயர்ந்து செல்கிறது. வெள்ளம், மண்சரிவு, வரட்சி, மற்றும் கடும் காற்று என்பன இலங்கையில் எப்போதும் நிகழும் அனர்த்தங்களில் பிரதானமானவையாக காணப்படுகின்றன.

இவ்வாறு எப்போதும் நிகழும் அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளுதல் மற்றும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வதற்காக மக்களுக்கும், அனர்த்த முகாமைத்துவத் துறையில் பணியாற்றி வரும் அலுவலர்களுக்கும் விழிப்புணர்வும், பயிற்சியும் வழங்க வேண்டியுள்ளதோடு, மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்திலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த குறிக்கோள்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக அனைத்து வசதிகளையும் கொண்ட அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளதோடு, அதனுடன் தொடர்புடைய கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் ஏற்கெனவே தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.8 அமைச்சுக் கட்டடத்தில் நிறுவப்பட்ள்ள ஏனை அலுவலகங்கள்

- கௌரவ அமைச்சரின் அலுவலகம்
- கௌரவ பிரதி அமைச்சரின் அலுவலகம்
- செயலாளரின் அலுவலகம்
- அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் செயகலம்
- அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

**1.9 அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – தாபனக் கட்டமைப்பு**



### 1.10 அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை

2005 ஆண்டின் 13 இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை அமைக்கப்பட்டுள்ளது. இதன் தவிசாளராக அதிமேதகு சனாதிபதி அவர்களும், மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் உப தவிசாளராகவும் இருந்து வருகின்றனர். அத்தோடு எதிர்க்கட்சித் தலைவர், சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏனைய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் மாகாண முதலமைச்சர்களையும் இச்சபை கொண்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ தேசியக் கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய மட்ட திட்டங்கள் மற்றும் தத்துவங்களை வலுவுக்கு கொண்டு வருதல், மேற்பார்வை, நாட்டில் இடம்பெறும் ஏதேனும் அனர்த்த நிலைமையின்போது தீர்மானங்களை எடுத்தல் என்பன இந்த தேசிய சபையின் பிரதான பணிகளாகும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இந்த ஆண்டில் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. அதில் பின்வரும் முன்னிலைப்படுத்தல்களுக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

01. 2013 – 2017 ஆண்டுகளுக்கென தயாரிக்கப்பட்ட இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்திற்கான அங்கீகாரம்.
02. அனாத்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளுக்கான அங்கீகாரம்.
03. 2013 ஆம் ஆண்டுக்கான அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுத்திட்டத்திற்கான அங்கீகாரம்.
04. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2013 – 2017 ஆண்டுகளுக்கான கூட்டிணைத் திட்டத்திற்கான அங்கீகாரம்.
05. நீர்த்தேக்கங்களில் பயணிகள் போக்குவரத்து இடம்பெறும்போது பாதுகாப்பு அங்கி அணிவதைக் கட்டாயமாக்குதல் தொடர்பான சட்டவிதிகளை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து தயாரிக்க தீர்மானித்தல்.
06. 2013 ஆம் ஆண்டுக்கென ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு மாத்தளை மாவட்டத்தில் நிலப்பகுதிகள் புதையுண்டுபோவதை ஆராய்ச்சி செய்வதற்கான அங்கீகாரம்.
07. அனர்த்த நிலைமையொன்றின்போது பாடசாலை மாணவர்களை தன்னார்வ அணியாக இணைத்துக்கொள்ளல் தொடர்பான வேலைத்திட்டமொன்றை கல்வி அமைச்சுடன் இணைந்து தயாரிப்பதற்கான அங்கீகாரம்.
08. அனர்த்த நிலைமையொன்றின்போது தொழிற்படுவதற்காக இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கான அங்கீகாரம்.

## 02. நிருவாக நடவடிக்கைகள்

✓ **ஆட்சேர்ப்பு நடைமுறை**

2013 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப உத்தியோபகத்தர் பதவிக்கென தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

✓ **பணியாட்தொகுதி**

| தொ இல | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி | உண்மையான பதவி அணி | வெற்றிடங்களின் எண் | பிற |
|---|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 1 | 1 | 0 | |
| 2 | மேலதிகச் செயலாளர்(அ/தி,நிவாரண சே) | 1 | 1 | 0 | |
| 3 | மேலதிகச் செயலாளர் (நிதி, நிருவாகம்) | 1 | 0 | 1 | |
| 4 | மேலதிக உதவிச் செயலாளர் | 1 | 1 | 0 | |
| 5 | தலைமைக் கணக்காளர் | 1 | 1 | 0 | |
| 6 | பணிப்பாளர் (அனர்த்த நிவாரண சேவை) | 1 | 1 | 0 | |
| 7 | பணிப்பாளர் (முகாமைத்துவம்) | 1 | 0 | 1 | |
| 8 | பணிப்பாளர் (திட்ட) | 1 | 1 | 0 | |
| 9 | பணிப்பாளர் (தேசிய அனர்த்த மு.சபை) | 1 | 0 | 1 | |
| 10 | உதவிச் செயலாளர் | 2 | 2 | 0 | |
| 11 | கணக்காளர் | 1 | 1 | 0 | |
| 12 | கணக்காளர் (அகக் கணக்காய்வாளர்) | 1 | 0 | 1 | |
| 13 | பி.பணிப்/உ.பணிப் (முகாமைத்துவம்) | 1 | 1 | 0 | |
| 14 | பி.பணிப்/உ.பணிப் (திட்ட) | 1 | 1 | 0 | |
| 15 | பி.பணிப்/உ.பணிப்(அனர்த்த நிவாரணசே.) | 3 | 1 | 2 | |
| 16 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 | |
| 17 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 | |
| 18 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 | |
| 19 | மொழிபெயர்ப்பாளர் | 2 | 1 | 1 | |
| 20 | அபிவிருத்தி அலுவலர் | 1 | 1 | 0 | |
| 21 | அபிவிருத்தி உதவியாளர் | 8 | 8 | 0 | |
| 22 | அபிவிருத்தி அலுவலர் (தரம் III ) | 30 | 24** | 0 | 6*** |
| 23 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 20 | 12 | 8 | |
| 24 | தரவுப் பதிவு செயற்படுத்துநர் | 1* | 0 | 1 | |
| 25 | தொழில்நுட்ப அலுவலர் | 1 | 0 | 1 | |
| 26 | நிழற்படக் கலைஞர் | 1 | 0 | 1 | |
| 27 | ஒளிப்படக் கருவி (இயக்குநர்) | 1 | 0 | 1 | |
| 28 | உதவி ஒளிப்படக் கருவி இயக்குநர் | 1 | 1 | 0 | |
| 29 | சாரதி | 15 | 12 | 3 | |
| 30 | அலுவலக உதவியாளர் | 15 | 14 | 1 | |
| | **மொத்தம்** | 117 | 88 | 26 | |

* அமைச்சில் தரவுப் பதிவு செயற்படுத்துநராக இணைக்கப்பட்டிருந்தவர் தற்போது செயலாளரின் இணைப்பு உத்தியேகத்தராக கடமையாற்றுகின்றார்.

** அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம்

*** பயிற்சி

அமைச்சு ஆரம்பிக்கப்பட்டபோது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 77 ஆக இருந்தது. பதவியணியில் மேற்கொண்ட படிப்படியான அதிகரிப்பைத் தொடர்ந்து 2013 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை 117 ஆக அதிகரித்துக்கொள்ள முடிந்தது. அமைச்சின் செயற்பணிகள் நாளுக்கு நாள் விஸ்தரிக்கப்படல் மற்றும் அமைச்சில் முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆகிய பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டதன் விளைவாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளது. அதன்படி அமைச்சினால் தயாரிக்கப்படும் வருடாந்த செயல் நிறைவேற்ற அறிக்கைகள், கூட்டிணைத் திட்டம், கொள்வனவுத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம் அத்துடன் நடுத்தர கால முதலீட்டுத் திட்டம் போன்றவற்றை தயாரித்து முன்னிலைப்படுத்த முடிந்துள்ளது.

✓ **பதவியிட மாற்றம் / ஓய்வு**

2013 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் அமைச்சின் அமைச்சின் 17 அலுவலர்கள் வேறு இடங்களுக்கு பதவியிட மாற்றம் பெற்றுச் சென்றுள்ள அதேநேரம், 13 அலுவலர்கள் பதவியிட மாற்றம் பெற்று அமைச்சுக்கு வந்துள்ளனர். 2013 ஆண்டில் ஓர் அலுவலர் ஓய்வில் சென்றுள்ளார். மருத்துவக் காரணங்களால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசின் பேரிலேயே இவர் ஓய்வில் சென்றுள்ளார்.

✓ **பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் சுட்டங்கள்**

2013 ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள பாராளுமன்றக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 07 ஆகும். இதன்போது எழுப்பப்பட்ட 17 கேள்விகளுக்குமான பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2011 தொடக்கும் 2013 வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டதும், கீழ்க் குறிப்பிட்டுள்ளதுமான பிரச்சனைகள் தொடர்பில் அடுத்தக்கட்டப் பணிகளை ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

01. அனர்த்தங்களின்போது சேதங்களுக்கு உள்ளாகும ்வீடுகளுக்கு வீடமைப்பு நிவாரணங்களை வழங்குவது தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு வழங்கி 152 (1) ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை மூலம் அமைச்சுக்கு இவ்விடயம் தொடர்பில் செயலாற்றுவதற்கான அதிகாரங்களையும், ஆலோசனைகளையும் வழங்குதல். இதனால், 2012 ஆண்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது வீடுகளை இழந்தவர்களுக்கு வீட்டு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு 2013 ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து 425 மில்லியன் ரூபாவினைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. வெறும் 05 மாதங்களில் 344 மில்லியன் ரூபாவினை அதிகமாக பெற்று முழுமையாக சேதமடைந்த 2142 வீடுகளுக்கும், பகுதியளவில் சேதமான 9956 வீடுகளுக்கும் வீடமைப்பு நிவாரணங்களை வழங்க இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

02. இடர்நேர்வுள்ள இடங்களில் நிர்மாணங்களை மேற்கொள்ளும்போது அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான அதிகாரம் கிடைக்கும் வகையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மைச் சட்டத்தை திருத்தியமைத்தல்.

03. நாட்டின் ஒருசில பிரதேசங்களில் அதிகமாக பதிவாகும் மின்னல் தாக்கங்களை குறைத்துக்கொள்ளும் வகையில் இலங்கை மின்னல் தாக்க பாதுகாப்புச் சட்டத்தை திருத்தியமைக்கும் பணிகளை ஆரம்பித்தல்.

04. பியகம பெஷன்வத்த பிரதேசத்தில் மண்சரிவு தொடர்பான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2014 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு

05. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இணைப்பாக்க நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக பிரதேச செயலக மட்டத்தில் பட்டதாரி ஒருவரை

நியமிக்கும் யோசனைக்கு அமைவாக, ஏற்கெனவே பிரதேச செயலகங்களுக்கென 310 பட்டதாரிகளும் மாவட்ட செயலகங்களுக்கென 23 பட்டதாரிகளும் இணைக்கப்பட்டுள்ளனர்.

- ✓ **அனர்த்த முகாமைத்துவ சட்டம் மீதான திருத்தம்**

2005 ஆண்டில் ஆக்கப்பட்டுள்ள சட்டத்தை அமுலாக்கும்போது நடைமுறை சார்ந்து எழும் சிக்கல்களைக் குறைத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அடங்கிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்தின் அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களத்தில் தயாரிக்கப்பட்ட முதலாவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான அமைச்சின் அவதானிப்புகள் மீண்டும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இயற்கையாகவும், மனிதனின் செயற்பாடுகள் காரணமாகவும் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பில் உடனடியாக துலங்க முடியும்.

- ✓ **தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கை**

அனர்த்த முகாமைத்துவத்தை வினைத்திறன் மற்றும் பயனுறுதியவாய்ந்த வகையில் மேற்கொள்ளக் கூடியதாக அமைச்சானது அனர்த்த முகாமைத்துவக் கொள்கையை வகுத்தமைத்து, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பியுள்ளது. இதற்கு நிதி மற்றும் வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சுகளினால் வழங்கப்படும் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக அங்கீகரிக்கப்படும்.

- ✓ **தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மைச் சட்டம்**

தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மைக்கு சட்ட ரீதியான அங்கீகாரத்தை ஏற்படுத்தும் வகையில், 2011 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மைக்கான சட்டவரைவைத் தயாரிக்கும் பணி இன்றளவில் சட்ட வரைஞர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதலாவது வரைவைத் தயாரிக்கும் பணிகளைப் பூர்த்தி செய்துள்ள சட்ட வரைஞர் திணைக்களமானது சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் மேலும் சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கென அமைச்சின் சிபாரிசுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இலாபம் ஈட்டும் நிறுவனமாக இயங்கி வரும் தேசிய கட்டிட ஆராய்சி அமைப்பாண்மைக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் மண்சரிவு அபாயத்தைக் குறைத்துக் கொள்வது தொடர்பான ஆராய்ச்சிகள், கள ஆய்வுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பணிகளை வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பூர்த்தி செய்து, அந்த நிறுவனத்தால் வழங்கக் கூடிய உடனடி சேவைகளை உயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது. இது நிறுவனத்தின் பணம் சம்பாதிக்கும் ஆற்றலை உயர்த்தவும் வழிவகுக்கும்.

- ✓ **மின்னல் தாக்க பாதுகாப்புச் சட்டம்**

இலங்கையில் சமீப காலமாக மின்னல் தாக்கம் அதிகரிரத்துள்ளதால் 2013 மே மாதம் 13 ஆம் திகதிய மற்றும் அ.நி/12/0598/548/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி மின்னல் தாக்க பாதிப்பு தொடர்பான தேசிய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் மின்னல் தாக்க பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை விதிப்பதற்குமான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. குறித்த குழு சட்டவரைவினைத் தயாரிக்கும் பணிகளை பூர்த்தி செய்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன. ஏற்கெனவே இந்த நிலையம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் இலங்கையில் மின்னல் தாக்கம் காரணமாக உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்ளவதற்கான விழிப்புணர்வு செய்யப்படுகிறது. இதன் மூலம் பாதுகாப்பான கலாசாரமும், நகரமும் உருவாக்கப்படும்.

✓ **சட்ட நடவடிக்கைகள்**

2013 ஆண்டில் அமைச்சுக்கு எதிராக மூன்று வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதன்படி இந்த ஆண்டில் குறித்த வழக்குகள் மீதான 8 விசாரணைகள் நடைபெற்றுள்ளன. இவற்றில் ஒரு வழக்கு இணக்கப்பாட்டுடன் முடிவடைந்துள்ளதோடு, இரண்டு வழக்குகள் மீதா விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. 2012 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆண்டில் அமைச்சுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 06இலிருந்து 03 ஆக குறைந்துள்ளமை தெளிவாகிறது.

**இடைக்கால முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

✓ **தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மை**

2007.03.13 ஆம் திகதி மற்றும் 07/0435/343/002 ஆம் இலக்க அமைச்சரவை நிருபம் ஊடாக அங்கீகாரம் பெற்று இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மையின் நிருவாக, நிதிசார்ந்த மற்றும் முகாமைத்துவ அதிகாரங்ளை நடைமுறைப்படுத்துவதற்காகவும், ஏனைய தீர்மானங்களை மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால முகாமைத்துவக் குழு மாதத்திற்கு ஒரு முறை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையில் கூடுகின்றது. 08 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவானது 2013 ஆண்டில் 8 கூட்டங்களை நடத்தியுள்ளதோடு, அதனாலான தீர்மானங்களின்படி தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மைக்கான சேவைகளை வினைத்திறன் மிக்கதாக வழங்க முடிந்துள்ளது.

✓ **அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நல்லாட்சி, முகாமைத்துவம் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டை முறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்த இடைக்கால முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டுள்ளது. அரச தொழில்முயற்சிகளின் நல்லாட்சிக்கான அறிவுரைப்புக் கோவையின் ஒழுங்கு விதிகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையில் 07 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதன்படி மேற்படி ஒழுங்கு விதிகளுக்கமைய தீர்மானங்களை மேற்கொள்ளுதல், வழிப்படுத்தல் மற்றும் மேற்பார்வை இடம்பெறுகிறது. இக்குழு 2013 ஆண்டில் 13 கூட்டங்களை நடாத்தியுள்ளது.

✓ **சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு**

அனர்த்தங்களை குறைத்துக்கொள்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆராய்தல் மற்றும் எதிர் காலத்தில் எழுக்கூடிய பிரச்சனைகளைக் கண்டறிதல் தொடர்பாக ஜெனிவாவில் நடைபெற்ற அனர்த்தங்களைக் குறைத்துக்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றல். அத்துடன் தென் கொரியா நீதி அமைச்சு மற்றும் வர்த்தக சமூகத்தினருடன் இலங்கையில் அனர்த்தங்களைக் குறைத்தல் தொடர்பான கருத்திட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ அமைசசினைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பங்கேற்றல்.

✓ **பொதுமக்களின் முறைப்பாடுகள்**

2013 ஆண்டில் அமைச்சுக்கு பொதுமக்களிடமிருந்து 35 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதோடு, அவை உரிய நடவடிக்கைகளின்பொருட்டு அமைச்சின் கீழ் இயங்கி வரும் அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மை, வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் நிரல் அமைச்சு போன்றவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நடவடிக்கைகள் மீதான பின்தொடர் ஆய்வும் செய்யப்பட்டுள்ளது. 2012 ஆண்டில் பொதுமக்களிடமிருந்து 81 முறைப்பாடுகள்

கிடைத்துள்ளன. எனவே, பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளில் தெளிவான வீழ்ச்சி காணப்படுகின்றது.

✓ **உற்பத்தித்திறன் / முகாமைத்துவக் குழுக்கள் அமைத்தல்**

முறைவழிகளையும், செயல் நடைமுறைகளையும் மேம்படுத்தும் வகையில முறையான வேலை பகுப்பு, ஒவ்வொரு பிரிவுக்குமான புறவய வேலை முறைக் குறிப்புகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நான்கு நிறுவனங்களினதும் குடி உரிமைப் பட்டயம் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சின் குடி உரிமை சேவைப்பெறுநர்களின் பட்டியல் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், வளப் பயன்பாட்டின் சிக்கனத்தைப் பேணும் வகையில் வழிச்சீராக்கல் இயந்திரத்தை மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரை மட்டும் செயற்படுத்துதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✓ **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**<u>உள்நாட்டில் பயிற்சிகள்</u>**

அமைச்சில் பணியாற்றுவோரின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் நான்கு நீண்டகால பயிற்சித் திட்டங்களில் 12 பேரும், பதினொரு குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களில் 35 பேரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

**<u>வெளி நாட்டில் பயிற்சிகள்</u>**

மாநாடுகள், சுட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற பதினொரு செயலமர்வுகளில் அமைச்சைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

✓ **அமைச்சரவை நிருபங்களும் அங்கீகாரங்களும்**

2006 தொடக்கம் 2013 ஆண்டு வரையான காலப்பகுதியில் அமைச்சு பல்வேறு விடயப்பரப்புகளை அடிப்படையாகக் கொண்ட 82 அமைச்சரவை நிருபங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளது. அமைச்சினதும், நாட்டின் நலன் கருதியும் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபங்களில் கீழ்க் காட்டப்பட்டுள்ளவற்றுக்கு அங்கீகாரம் கடைத்ததன் விளைவாக, இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ துறை தொடர்பில் பொது மக்களிடையே பரந்தளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அனர்த்த நிலைமையொன்றின்போது துரித வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான வாய்ப்பும் கிடைத்துள்ளது.

1. இலங்கையில் அவசர நிலைமைகளின்போது செயலாற்றும் இயலளவை விருத்தி செய்தல்
2. வெளிநாட்டு உதவி மூலம் இலங்கையில் அனர்த்தங்களை எதிர்கொள்ளும் திறனை அதிகரித்தல்.
3. வளிமண்டலவியல் திணைக்களத்திற்கென டொப்லர் இரேடார் கட்டமைப்பை நிறுவுதல்.
4. ஆசிய அனர்த்த முன்னெச்சரிக்கை நிலையம் மற்றும் தாய்லாந்துடன் அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
5. அதிகளவில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய மாவட்டங்களில் வெள்ள அனர்த்தக் கட்டுப்பாட்டுக் கருத்திட்டம்
6. காட்டுத் தீ அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கான துரித முறைவழிகளைத் தயாரித்தல்

எனவே, 2013 ஆண்டுக்கென அமைச்சரவைக்கு 13 நிருபங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| தொ இல | விடயம் | அமைச்சரவை நிருப இலக்கமும் அங்கீகாரம் பெற்ற திகதியும் | அடைவு |
|---|---|---|---|
| 01 | 2012 இல் நாட்டில் ஏற்பட்ட அவசர அனர்த்த நிலை அறிக்கை | அ.நி/13/0018/548/001 2013.01.03 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 02 | அனர்த்த நிவாரணம் வழங்கப்படுவதை பயன் தரக் கூடியதாகவும், முறையாகவும் மேற்கொள்ளல் | அ.நி/13/0034/548/001-I 2013.01.24 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 03 | தேசியக் கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் கடமை அடிப்படையில் கலாநிதி திரு.கர்ணாவர்தனவை நியமித்தல் | அ.நி/13/0144/548/002 2013.04.08 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 04 | இயற்கை அனர்த்தங்களுக்கு துரிதமாக துலங்குதல் தொடர்பான உடன்படிக்கை | அ.நி/13/0687/548/003 2013.06.06 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 05 | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மையின் 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | அ.நி/13/0708/548/004 2013.06.13 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 06 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | அ.நி/13/0926/548/005 2013.07.18 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 07 | வளிமண்டவியல் திணைக்களத்தின் பணியாளர் வெற்றிடத்தைப் பூர்த்தி செய்வதற்காக குறுகிய கால மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | அ.நி/13/1311/548/007 2013.10.17 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 08 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொழிற்பாட்டுக் கருமபீட கடமைநேர பதவியணி உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை தின கொடுப்பனவு செலுத்துதல் | அ.நி/13/1336/548/008 2013.10.03 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 09 | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பாண்மையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு கலாநிதி திரு. ஆசிரி கர்ணாவர்தனவை நியமித்தல் | அ.நி/13/0034/548/001-I 2013.10.03 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| | தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கைக்கு அங்கீகாரம் வழங்கல் | - | நிதி அமைச்சு, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு மூலம் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புகளை உள்ளடக்குவதற்கு உட்பட்டதாக |

| | | | |
|---|---|---|---|
| | | | அங்கீகாரம் கிடைத்துள்ளது. |
| 11 | 17 வது சார்க் உச்சிமா நாட்டில் கையொப்பம் இடப்பட்ட, இயற்கை அனர்த்தங்களுக்கு துரிதமாக துலங்குதல் தொடர்பான உடன்படிக்கையை அத்தாட்சிப்படுத்த அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் | - | நிதி அமைச்சு வழங்கியுள்ள அவதானிப்புகள் தொடர்பில் அடுத்த கட்டப் பணிகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| 12 | தேசிய பாதுகாப்பு தின அனுஷ்டிப்பு 2013 | அ.நி/13/1716/548/010 2013.11.20 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 13 | திரு. எல். சந்திரபாலவை வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகமாக நியமித்தல் | அ.நி/13/1783/548/011 2013.12.16 | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 14 | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்கு அங்கீகாரம் பெறல் | - | அங்கீகாரம் கிடைத்துள்ளது |
| 15 | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்கு அங்கீகாரம் பெறல் (நிதி, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சுகள் மூலம் வழங்கப்பட்ட அவதானிப்புகளை உள்வாங்கி தயாரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம்) | - | 2014 ஆண்டில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் சுட்டத்தில் முடிபு எடுக்கப்பட உள்ளது. |

✓ **பொருள் இருப்பாய்வுப் பணிகளின் முன்னேற்றம்**

2013 ஆண்டுக்கு ஏற்புடையதாக அமைச்சிலுள்ள அனைத்து உருப்படிகள் தொடர்பான இருப்பாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

✓ **"தேசிய பாதுகாப்புத் தினம்"**

2006 மே மாதம் 31ஆம் திகதிய மற்றும் 06/0984/208/008 ஆம் இலக்க அமைச்சரவை நிருபம் மூலம் உத்தேசிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கிகாரத்தின்படி ஒவ்வோராண்டும் டிசெம்பர் 26ஆம் திகதி "தேசிய பாதுகாப்புத் தினம்" பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதன் நோக்கம் இயற்கையாகவும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாகவும் நிகழும் அனர்த்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் அறிவை மேம்படுத்துதல், அவர்களின் கவனத்தை ஈர்த்தல், அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல் அத்துடன் முன்னெச்சரிக்கை தொடர்பாக மக்களின் உளப்பாங்கினை மாற்றியமைத்தல், குறிப்பாக 2006 டிசெம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி அனர்த்தம் போன்றவற்றுக்கு துரித கதியில் துலங்கும் ஆற்றலை விருத்தி செய்தல் என்பனவாகும். இந்த நோக்கங்களை முதன்மைப்படுத்திய இந்த நிகழ்ச்சி 8வது முறையாக 2013 டிசெம்பர் 26ஆம் திகதி மாண்புமிகு பிரதம அமைச்சரின் தலைமையில் களுத்துறை மாவட்டச் செயலகத்தின் ஓத்துழைப்புடன் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

இதற்கு இணையாக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்,விழிப்புணர்வு நிகழ்ச்சித்

திட்டங்கள், நீர்த்தேக்கங்களை அண்டிய பிரதேசங்களில் அறிவித்தல் பலகைகளை காட்சிக்கு வைத்தல், அத்துடன் தேசிய மட்டத்தில் சித்திர மற்றும் கட்டுரைப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. மேலும், பேருவளை, அகலவத்தை மற்றும் மில்லனிய ஆகிய மூன்று பிரதேச செயலகங்களில் அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய மூன்று மாதிரி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

✓ **" தேசத்திற்கு மகுடம்" அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் கண்காட்சியும்.**

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மட்டத்தில் அல்லாது அதனை நாட்டின் அபிவிருத்திப் பணிக்கு பக்கபலமாக அமைத்துக்கொள்ளும் செயற்பாடு 2010ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு தொடக்கம் கண்டி, புத்தள, அநுராதபுரம், அம்பாறை, குளியாப்பிட்டி போன்ற பிரதேசங்களில் 04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்போது அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கான சிறிய அளவிலான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மழை நீர்த்தாங்கிகள் விநியோகம், வளிமண்டளவியல் மற்றும் இயற்கை அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வு, மழைமானி நிறுவுதல் அத்துடன் மண்சரிவு அபாயத்தைக் குறைத்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற பல செயற்பாடுகளினூடாக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

2013ஆம் ஆண்டின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை ஹாடி கல்லூல வளாகத்தில் நடாத்தப்பட்டதோடு இதற்கு இணையாக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களை அமைச்சின் கீழ் இயங்கி வரும் துணை நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தத் தேவையான நிதி ஏற்பாடுகள் இணைப்பாக்கம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான பொறுப்புகளை அமைச்சு ஏற்றிருந்தது. இதற்கு மேலதிகமாக 2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கண்காட்சி தொடர்பான பூர்வாங்க செயற்பாடுகளும் திட்டமிடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

✓ **டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்**


2013ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு நுளம்பு ஒழிப்பு வாரங்களை மூன்று முறைகள் பிரகடனம் செய்தது. அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சின் மூலம் துப்பரவேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டதோடு, நுளம்புகள் பரவக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அது தொடர்பாக பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகர்களை விழிப்புணர்வு செய்து பீ.ரீ.ஜ இரசாயனம் பிரயோகிக்கப்பட்டதுடன் நுளம்பு ஒழிப்பு எண்ணெயும் தெளிக்கப்பட்டது. மேலும், தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களை விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடாத்தப்பட்டது. அமைச்சின் வளாகத்தில் வாரம்தோறும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மாதாந்தம் தொடர்ச்சியாக சுகாதார அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.






**நிதிசார் முன்னேற்றம் - 2010 – 2013**

2010 தொடக்கம் 2013 ஆண்டு வரை அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு மீண்டெழும் மற்றும் மூலதன நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. .




மூலம் : அனர்த்த முகாமைத்துவ அமைச்சு




**மூலம் : அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

2010 – 2013 வரையான காலப்பகுதியில் அமைச்சுக்கு அதிகூடிய மூலதன நிதி 2011 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கிடைத்துள்ளது. 2011 ஆண்டில் 23 மாவட்டங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்திய வெள்ள அனர்த்தம் காரணமாக வெள்ள நிவாரணம் வழங்க நேரிட்டமை மற்றும் 2014 ஆண்டில் வீடமைப்பு நிவாரணங்களை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு நிதி வழங்கியமை காரணமாக இந்நிலை ஏற்பட்டது.

## 03. திட்ட மற்றும் அபிவிருத்திப் பணிகள்


### ✓ அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மேற்பார்வை

அமைச்சு மற்றும் அதன் துணைநிறுவனங்களான வளிமண்டளவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பான்மை மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் ஆகியன இணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் / கருத்திட்டங்களின் இணைப்பாக்க மற்றும் மேற்பார்வை, அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் அங்கிகாரம் பெறுவதற்காக சிபாரிசுகளுடன் கருத்திட்டங்களை முன்வைத்தல்,நிதி நிறுவனங்களுடன் இணைப்பாக்கப் பணிகள்,திறைசேரியிலிருந்து தேவையான நிதியினையும் பணி முற்பணத்தையும் உரிய நேரத்தில் விடுவித்துக்கொள்வதற்கான இணைப்பாக்கப் பணிகள் அத்துடன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்/கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொண்டு, அடைவுகளைப் பரிசீலிப்பதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகள்/ நோக்கங்களை அடைதல் மற்றும் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் வழங்கப்படுவதுடன் இதன் மூலம் அந்தந்தப் பிரதேசங்களில் அனர்த்தங்களைக் குறைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

2013ஆம் ஆண்டில் அந்தந்த நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்ட கருத்திட்ட மேற்பார்வை மற்றும் செயற்பாட்டுக் குழுவின் 10 கூட்டங்களை நடாத்தி அமுலிலுள்ள கருத்திட்டங்களை உரியவாறு நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் பிரிவு கடந்த சில வருடங்களாக வினைத்திறன், பயனுறுதியான கருத்திட்ட மேற்பார்வை பொறிமுறையை செயற்படுத்தியதன் விளைவாக அந்தந்த நிறுவனங்கள் எதிர்பார்த்த இலக்குகளை எட்ட முடிந்தது. இதனால் மக்கள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருந்து வருகின்றனர். அவர்களின் பிரதிபலிப்பும் உயர்ந்த மட்டத்தில் உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது அனர்த் முகாமைத்துவத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களைக் குறைத்துக்கொள்வதற்காக வேலைத்திட்டங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.




**மூலம் : அனர்த்த முகாமைத்துவ அமைச்சு**

2013 ஆண்டில் கீழ்க் காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்களை முறையாக மேற்பார்வை செய்ததன் மூலம் அந்தந்த கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த இயலுமானதோடு, அப்பிரதேசங்களில் வசிப்பவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை கட்டியெழுப்பவும் வாய்ப்பு கிட்டியது.

- மண்சரிவு அபாய வலைய படமாக்கல் கருத்திட்டம்
- பாணந்துறை, யாழ்ப்பாணம் மற்றும் தம்புள்ளை பிரதேசங்களில் வெள்ளக்கட்டுப்பாட்டுக் கருத்திட்டங்கள்
- மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவுகளினாலான அனர்த்தக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள்
- தெனியாய கொன்கல பிரதேசத்தில் டொப்லர் இரேடார் கட்டமைப்பை நிறுவுதல்
- கெறண்டிடில்ல மண்சரிவுக் கட்டுப்பாட்டுக் கருத்திட்டம்
- ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (UNHABITAT) கீழ் முன்னெச்சரிக்கை கட்டமைப்பு ஒன்றை நிறுவுதல்
- எதிர்பாரா அனர்த்த நிவாரண சேவைகள்

### ✓ நடுத்தரக் கால முதலீட்டுத் திட்டம் 2013 -2015

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை துரிதமாகவும் முறையாகவும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக கூட்டிணைத்திட்டத்திற்கு ஏற்புடையதாக நடுத்தரகால முதலீட்டுத் திட்டம் (2013-2015) தயாரிக்கப்பட்டள்ளது. மஹிந்த சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேசிய நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளுக்கு அமைவாக அமைச்சின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சின் விடயப் பரப்பினுள் இனம்காணப்பட்டுள்ள நோக்கங்கள், செயல் நிறைவேற்றச் சுட்டிகள் மற்றும் மூலோபாய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நடுத்தரகால முதலீட்டுத் திட்டம் (2013-2015) மூலம் இடர்நேர்வைக் குறைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்காக அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கட்டாயமாகக் கிடைக்க வேண்டும். எனவே, அதற்குத் தேவையான கொள்கை சார்ந்த முடிவுகள், வழிகாட்டல் மேற்பார்வை, வழிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுப் பணிகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் நிறைவேற்றப்பட்டன.

### ✓ கூட்டிணைத் திட்டம் - 2013 – 2015

தேசிய கொள்கைகளையும் முன்னுரிமைகளையும் கவனத்தில் கொண்டு அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை மூன்று(3) விடயங்களின் அடிப்படையில் அதாவது, நோக்கம், செயல்நிறைவேற்றச் சுட்டிகள், மூலோபாய மற்றும் எதிர்பார்த்த அடைவுகளைத் திட்டமிட்டு மூன்று ஆண்டுகளுக்கான கூட்டிணைத் திட்டம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இடர்நேர்வைக் குறைப்பதற்கும் அனர்த்தத்திற்குப் பின்னரான நிவாரணங்களில் தங்கிவாழும் மனநிலையிலிருந்து மீண்டு, இடர் நேர்வைக் கண்டறிந்து மதிப்பீடு செய்வதன் மூலம் நிலைபேறாக அபிவிருத்தியைப் பேணி, பாதுகாப்பானதோர் இலங்கைக்கான பாதையும் இதன்மூலம் வகுக்கப்பட்டுள்ளது.
அண்மைக் காலத்தில் வானிலை மாற்றங்களில் அதிகரிப்பும் அதனாலான விபத்துக்களில் அதிகரிப்பையும் கவனத்தில் கொண்டு அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கான மூலோபாய மற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இந்த கூட்டிணைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

✓ **மனித உரிமை செயற்பாட்டுத் திட்டத்தின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை**

மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும் மேம்படுத்துவதையும் முதன்மையாகக் கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. அத்திட்டத்தில் இந்த அமைச்சின் சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

✓ **2014 ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கான அங்கீகாரம்**

அரசாங்கம் நாட்டில் அனர்த்தங்களைக் குறைத்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி வருவதால் மாவட்ட செயலாளர்களிடமிருந்து கிடைக்கும் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் இனம்காணப்பட்டுள்ள 478 கருத்திட்டங்களில் செயற்படுத்தக்கூடிய 156 கருத்திட்டங்களுக்கான அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிதி, திட்டமிடல் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

✓ **இலங்கை அனர்த்த முகாமைத்துவ முழுதளாவிய திட்டம் (2014 – 2018)**

அதிமேதகு சனாதிபதி அவர்கள் தலைமை வகிக்கும் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி முழுதளாவிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தைத் (2014 – 2018) தயாரிக்கும் பணிகள் 2013ஆம் ஆண்டில் ஆரப்பிக்கப்பட்டன. இத்திட்டத்தை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான துறை சிறப்பறிஞர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட இத்திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கிகாரத்திற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இதன்மூலம் இனம்காணப்பட்டுள்ள செயற்பாடுகளை 2014ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.





**04. கணக்கீட்டு நடவடிக்கைகள்**

✓ செலவு மதிப்பீடு – 2013

| | அமைச்சரின் அலுவலகம் | | நிருவாக, தாபன சேவைகள் | | அனர்த்த நிவாரண தொழிற்பாடுகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 106-01-1 | | 106-01-2 | | 106-02-4 | |
| | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன |
| 1. மதிப்பீடு செய்யப்பட்ட நிதி | 44,350,000.00 | 2,500,000.00 | 56,500,000.00 | 51,450,000.00 | 244,600,000.00 | 13,325,000.00 |
| 2. நி.பி 66 இன் கீழ் மாற்றுதலும் குறைநிரப்பு நிதியும் | 7,777,600.00 | 25,420,304.00 | 2,707,500.00 | 58,400,000.00 | 45,366,197.00 | 447,727,822.00 |
| 3. தேறிய நிதி | 52,127,600.00 | 27,920,304.00 | 59,207,500.00 | 109,850,000.00 | 289,966,197.00 | 461,052,822.00 |
| 4. செலவுகள் | 51,580,042.51 | 27,824,260.63 | 53,701,531.00 | 88,673,862.00 | 216,659,017.87 | 368,226,780.24 |
| 5. செலவு விகிதம் | 98.95 % | 99.66 % | 90.70 % | 80.72 % | 74.72 % | 79.87% |

✓ **செலவுகளும் நிதியிடலும்**

| குறியீடு | செலவு முகாமைத்துவம் | தேறிய நிதி | உண்மையான செலவுகள் |
|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 210,105,404.00 | 202,330,096.14 |
| 12 | வெளிநாட்டு உதவி- கடன் | - | - |
| 13 | வெளிநாட்டு உதவி- கொடைகள் | 39,000,000.00 | 18,708,860.00 |
| 17 | வெளிநாட்டு உதவி தொடர்பான தேசிய நிதி | - | - |

✓ **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**

| | செலவின் உச்ச எல்லை | ஆகக் குறைந்த வரவு எல்லை | உச்ச பற்று மீதி எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுக் கணக்கில் அதிகாரம் அளிக்கப்பட்ட எல்லை | 4,000,000.00 | 2,500,000.00 | 16,000,000.00 |
| 2013.12.31 දිනට සත්‍ය අගය | 2,850,000.00 | 2,796,807.00 | 9,270,146.50 |

✓ **2013.12.31 திகதியன்று கடன் / முற்பணம்**

| கடன் வகை | கடன் அளவு | கடன் பெற்ற எண்ணி |
|---|---|---|
| 01. பண்டிகை கால முற்பணம் | 415,000.00 | 83 |
| 02. விசேட முற்பணம் | 42,500.00 | 17 |
| 03. இடர்க் கடன் | 2,392,500.00 | 23 |
| 04. மிதி வண்டிக் கடன் | - | - |

2013 ஆண்டில் ஒதுக்கீட்டுக் கணக்கும், அரசாங்க அலுவலர்களின் முற்பண ‘‘பி’’ கணக்கும் 2013012.31 ஆம் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு இன்றளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

✓ **பிற**

2013 ஆண்டில் எழுப்பப்பட்ட 05 கணக்காய்வு விசாரணைகளுக்குமான பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க கணக்குகள் பற்றிய குழு மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகளை திருத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 05. கொள்வனவு நடவடிக்கைகள்

✓ **2013 ஆண்டில் அமைச்சின் கொள்வனவு தொடர்பான செலவு விபரங்கள் ரூ (மி)**

**அமைச்சரின் அலுவலகம்**

1201 **- எழுது பொருட்கள்**

| | |
|---|---|
| நிதி | - 1.15 |
| செலவு | - 1.14 |
| நிதிசார் முன்னேற்றம் | - 99.67% |

**2102 - மரதளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்**

| | |
|---|---|
| நிதி | - 1.15 |
| செலவு | - 1.15 |
| நிதிசார் முன்னேற்றம் | - 99.70% |

**2103 - இயந்திர, பொறித்தொகுதி**

| | |
|---|---|
| நிதி | - 1.0 |
| செலவு | - 0.99 |
| நிதிசார் முன்னேற்றம் ) | - 99.77% |

**அமைச்சின் அலுவலகம்**

**1201 - எழுது பொருட்கள்**

| | |
|---|---|
| நிதி | - 1.60 |
| செலவு | - 1.58 |
| நிதிசார் முன்னேற்றம் | - 99.14 % |

**2102 - மரதளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்**

| | |
|---|---|
| நிதி | - 1.0 |
| செலவு | - 0.99 |
| நிதிசார் முன்னேற்றம் | - 99.91 % |

**2103 - இயந்திர, பொறித்தொகுதி**

| | |
|---|---|
| நிதி | - 1.0 |
| செலவு | - 0.98 |
| நிதிசார் முன்னேற்றம் | - 98.03 % |

2013 கொள்வனவுத் திட்டத்தின்படி அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 06. அகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

2013 ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் சார்ந்ததாக 04 கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த ஆண்டில் விசேட விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

2013 ஆண்டில் 03 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. 2013 ஆண்டில் 07 கணக்காய்வு விசாரணைகள் கோரப்பட்டிருந்ததோடு, அவை அனைத்திற்குமான பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

### ✓ 2013 ஆண்டின் கணக்காய்வு விசாரணைகளும், அளிக்கப்பட்டுள்ள பதில்களும்

| கணக்காய்வு விசாரணைத் திகதி | கணக்காய்வு விசாரணைத் இலக்கம் | விடயம் | பதில்கள் அனுப்பப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 2013.05.17 | டிஈ/ஜீ/எம்டிஎம்/க.வி/2011 | ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 2012 ஆம் ஆண்டு | 2013.05.23 |
| 2013.06.03 | டிஈ/ஜீ/எம்டிஎம்/க.வி/2012 | ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 2012 ஆம் ஆண்டு | 2013.06.05 |
| 2013.06.12 | டிஈ/ஜீ/எம்டிஎம்/அ.அ.மு.பி.க /2012 | அரசாங்க அலுவலர்களின் முற்பண பி கணக்கு -2012 கணக்கு இலக்கம் 106011 | 2013.06.19 |
| 2013/02/06 | டிஈ/ஜீ/என்டிஆர்எஸ்சீ/க.வி/01/2012 | அலுவலர்களின் லீவு சரிபார்ப்பு | 2013.03.08 |
| 2013.02.28 | டிஈ/ஜீ/என்டிஆர்எஸ்சீ/க.வி/02/2012 | திடீர் அனர்த்த நிலைமைகளில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதை பரிசீலித்தல் | 2013.04.08 |
| 2013.08.21 | டிஈ/ஜீ/எம்டிஎம்/மு.க.அ/2011 | ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 106 அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 | 2013.08.29 |
| 2013.09.10 | டிஈ/ஜீ/எம்டிஎம /154(6)/2012 | ஒதுக்கீட்டுக் கணக்குகள் - 106 அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2012 ஆண்டுக்கான அறிக்கை | 2013.09.17 |

அமைச்சின் உறுதிச் சீட்டுக்கள் சரிபார்ப்பு, லீவு அறிக்கை பேணல், உருப்படி இருப்பு பட்டியல் அறிக்கை, பெயர்வழிக் கோப்புகள், செயல் நிறைவேற்றத் திட்டம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் கொள்வனவுத் திட்டம் என்பவற்றை அகக் கணக்காய்வு விசாரணைக்கு உட்படுத்தியதன் விளைவாக சரிப்படுத்தல்களையும் உரிய நேரத்தில் வேலைகளை நிறைவு செய்வதற்குமா வாய்ப்பு கிடைத்தது. அனர்த்தங்களின்போது மாவட்டச் செயலகங்களுக்கு அனர்த்த நிவாரணங்கள் வழங்கல், அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மூலம் வளப் பயன்பாட்டை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்ளுதல்

## 07. தேசிய அனர்த்த நிவாரண சேவைப் பணிகள்

### √ அறிமுகம்

அனர்த்த நிவாரண சேவைப் பணிகளின் போது அமைச்சின் கீழுள்ள தேசிய அனர்த்த சேவைகள் நிலையமானது வினைத்திறன்மிகு சேவையை வழங்குவதோடு அது 1996 ஆம் ஆண்டு சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்பல் அமைசின் கீழ் தாபிக்கவும்பட்டது. நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளைத் திட்டமிடுவதற்காகவும், நடைமுறைபடுத்துவதற்காகவும் அது 2005.12.08 ஆம் திகதிய 1422/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டது. 2007.01.09 ஆம் திகதிய 1482/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அது தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் என பெயரிடப்பட்டு மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சிடம் சாட்டப்பட்டது. 1651/220 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2010.04.30 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்நிலையம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்படுகின்ற கொள்கை வழிகாட்டலுக்கமைவாக சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேசச் செயலகங்கள் ஊடாக அதன் கருத்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைபடுத்தப்படுகின்றன. அதேவேளை, சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களது மேற்பார்வையின் கீழ் அபிவிருத்தி உதவியாளர் ( அனர்த்த முகாமைத்துவ) மற்றும் அபிவிருத் உத்தியோகத்தர் (அனர்த்த நிவாரண சேவைகள்) என்போர் அனர்த்த நிவாரண இணைப்பாளர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

### ✓ இலக்குகளும் செயற்பாடுகளும்

| இலக்குகள் | செயற்பாடுகள் |
|---|---|
| அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் | வினைத்திறன்மிகு அனர்த்த நிவாரண சேவையின் ஊடாக பொருத்தமான பயனாளிகளுக்கு அனர்த்த நிவாரணங்களை வழங்குதல்<br>அனர்த்தங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளை மறுசீரமைத்தல்<br>அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பாக அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களை வலுவூட்டுதல் |
| தகவல் தொடர்பாடல் செயன்முறையை வலுவூட்டுதல் | அனர்த்தம் இடம்பெற்று குறுகிய காலத்தில் இணையத்தள தகவல் முறைமையின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்<br>தகவல் தொடர்பாடல் வலையமைப்பை வலுவூட்டுதல் |
| சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் | அனர்த்தங்களின் காரணமாக இடம்பெறுகின்ற சேதத்தைக் குறைத்துக் கொள்வதற்காக கிராமிய மட்டத்தில் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தக் குழுக்களை வலுவூட்டுதல்<br>அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக சமதாயத்தையும் மாணவர்களையும் விழிப்பூட்டுதல் |
| நல்லாட்சியை ஏற்படுத்துதல் | நிவாரணச் சேவைகள் வழங்கப்படுதல் பற்றிய நெறியாக்கத்தினை சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைவாக மேற்கொள்ளுதல் |

2013.12.31 ஆம் திகதியில் பணியாட்றொகுதி

| தொடர் இல | பதவி | சேவை | அங்கீகரிக்கப்பட்ட பணியாட்றொகுதி | உள்ள பணியாட்றொகுதி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் | இ.நி.சே | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் | இ.நி.சே | 01 | - | 01 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே | 02 | 01 | 01 |
| 04 | அபிவிருத்தி உதவியாளர் (அனர்த்த முகாமைத்துவம்) | - | 32 | 31 | 1 |
| 05 | அபிவிருத்தி உத்தியோகத்தர் (அனர்த்த முகாமைத்துவம்) | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் சேவை | 04 | 04 | - |
| 06 | அபிவிருத்தி உத்தியோகத்தர் (அனர்த்த நிவாரண சேவைகள்) | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் சேவை | 332 | 309 | 23 |
| 07 | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே | 08 | 03 | 05 |
| 08 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ( II ஆம் வகுப்பு) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை | 02 | - | 02 |
| 09 | கருத்திட்ட உத்தியோகத்தர் | - | 01 | - | 01 |
| 10 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் ( III ஆம் வகுப்பு) (தரவுப் பதிவு செயற்படுத்துனர்) | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை | 01 | - | 01 |
| 11 | சாரதி | சாரதி சேவை | 07 | 04 | 03 |
| 12 | அலுவலக பணி உதவியாளர் | கே.கே.எஸ்.சேவை | 04 | 04 | - |
| 13 | லொரி சாரதி உதவியாளர் | - | 05 | 03 | 02 |
| மொத்தம் | | | **400** | **360** | **40** |

## இடமாற்றங்கள்

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை உள்ளக இடமாற்றங்கள் பன்னிரண்டு (12) இடம்பெற்றதோடு பிற அமைச்சுகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லல் மற்றும் இடமாற்றம் பெற்று வருதல் நான்கு (4) இடமபெற்றுள்ளது. பதிவாளர் சேவையின் ஒரு பதவிக்காக இடமாற்றம் பெற்றுச் செல்லல் ஒன்று (01) இடம்பெற்றுள்ளது.

## பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

### உள்நாட்டுப் பயிற்சிகள்

நிதி நிருவாகம் மற்றும் ஜீ.ஐ.எஸ். பயன்பாடு, கடிதக் கோப்பாக்கம் மற்றும் கடிதங்களைத் தயாரித்தல், ஓய்வூதிய நடவடிக்கைகள், நேர முகாமைத்துவம், நிதி நிருவாகம் மற்றும் கணக்கீடு போன்ற வகையிலான பல உள்நாட்டுச் செயலமர்வுகளுக்காக 2013 ஆம் ஆண்டு ஏழு(07) உத்தியோகத்தர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

### வெளிநாட்டுப் பயிற்சிகள்

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்து அனர்த்த நேர்வு முகாமைத்துவம் தொடர்பாக இந்தோநீசியாவில் நடத்தப்பட்ட சர்வதேச செயலமர்வு, தய்லாந்தில் நடத்தப்பட்ட அனர்த்த மீட்டெழுச்சி தலைமைத்துவ செயலமர்வுக்காகவும் தாய்லாந்தில் நடத்தப்பட்ட ஓசோன் பயிற்சிச் செயலமர்வு மற்றும் ஆசிய வலயத்திற்கான அனர்த்த நிவாரண சேவைகள் பயிற்சிச் செயலமர்வு, காலநிலை மாற்றங்கள் தொடர்பாக இசைவாக்கம் அடைதல் பற்றிய கொள்கையை நடைமுறைபடுத்தல் என்ற வகையில் நான்கு (4) சர்வதேச செயலமர்வுகளுக்காகவும் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர்.

## நிதிசார் முன்னேற்றம்

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலிருந்து தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்காக 751.01 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில் மீண்டெழும் செலவுகளுக்காக 289.96 மில்லியன் ரூபாவும், மூலதன செலவுகளுக்காக 461.05 மில்லியன் ரூபாவும் உள்ளடங்கியிருந்தன. 2013 டிசெம்பர் 31 ஆம் திகதியில் மீண்டெழும் செலவுகள் 75% மாகும். அதாவது, 216.65 மில்லியன் ரூபாவாகும். மூலதனச் செலவு 79% மாகும். அதாவது, 368.44 மில்லியன் ரூபாவாகும். அதன் படி ஒட்டுமொத்தச் செலவு 78% மாகும். அதாவது, 585.27 மில்லியன் ரூபாவாகும்.

### நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைபடுத்துதல் - 2013

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையமானது (NDRSC) அனர்த்த நிவாரணப் பணிகளைத் திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்காக 2011.06.14 ஆம் திகதி தொடக்கம் பயன்படுத்திய 152 ஆம் இலக்கமுடைய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டதோடு அதற்குப் பதிலாக தொழிற்படுவதற்கு 2013.07.04 ஆம் திகதி தொடக்கம் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 152(1) வெளியிடப்பட்டது.

அங்கனம், தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 152ன் மூலம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வீட்டுச் சேதங்கள், பயிர்ச் சேதங்கள் மற்றும் சுய தொழில்களுக்கான சேதங்கள் என்பவற்றுக்காக நிவாரணங்கள் வழங்கப்படும் நடவடிக்கைகள் மீண்டும் இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.



## துரித அனர்த்த நிவாரணங்கள்

இதன் கீழ் துரித அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக அதாவது, இயற்கை அனர்த்தங்களின் காரணமாக பாதிக்கப்படுகின்ற குடும்பங்களுக்காக சமைத்த உணவு, உலர் நிவாரணம், சமையலறை உபகரணங்கள், தொழில் உபகரணங்கள், மரண நிவாரணங்கள், மருத்துவ உதவிகள் என்பவற்றுக்காக 2013 ஆம் ஆண்டின் பொருட்டு அரசாங்கம் 203 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தது. அதில் 2013 டிசெம்பர் மாதம் முடிவில் மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட மொத்த நிதியின் பெறுமதி 158.82 மில்லியன் ரூபாவாகும் என்பதோடு இருபத்தைந்து (25) மாவட்டங்களினுள் துரித அனர்த்த நிவாரணங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 143.94 மி.ரூபாவாகும். இது விகிதாசாரமாக 91% மாகும்.


**2013 ஆம் ஆண்டு துரித நிவாரண நடவடிக்கைகளுக்காக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் (மி . ரூ)**

| மாவட்டம் | வழங்கப்பட்ட நிதியின் அளவு (மி.ரூ) | செலவு மி.ரு |
|---|---|---|
| அம்பாறை | 2.00 | 1.43 |
| அநுராதபுரம் | 3.68 | 2.93 |
| பதுளை | 1.30 | 0.85 |
| மட்டக்களப்பு | 27.57 | *27.97 |
| கொழும்பு | 6.01 | 5.55 |
| காலி | 3.00 | 0.80 |
| கம்பஹ | 2.57 | 2.40 |
| அம்பாந்தோட்டை | 23.21 | 19.02 |
| யாழ்ப்பாணம் | 4.70 | 4.70 |
| களுத்துறை | 2.02 | 0.47 |
| கண்டி | 2.53 | 1.75 |
| கேகாலை | 0.06 | 0.06 |
| கிளிநொச்சி | 9.50 | 9.50 |

| மாவட்டம் | வழங்கப்பட்ட நிதியின் அளவு (மி.ரூ) | செலவு மி.ரூ. |
|---|---|---|
| குருநாகல் | 0.45 | 0.40 |
| மன்னார் | 21.00 | *23.50 |
| மாத்தளை | 1.96 | 1.43 |
| மாத்தறை | 1.09 | 0.16 |
| மொனறாகலை | 2.73 | 0.84 |
| முல்லைத்தீவு | 9.02 | 7.08 |
| நுவரெலியா | 6.49 | *7.90 |
| பொலொனறுவை | 5.32 | 5.00 |
| புத்தளம் | 13.55 | 12.47 |
| இரத்தினபுரி | 2.04 | 1.03 |
| திருகோணமலை | 0.02 | 0.02 |
| வவுனியா | 7.00 | 6.68 |
| **மொத்தம்** | 158.82 | 143.94 |

**மூலம் : தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்.**

*** வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளன.**




**2013/12/31 ஆம் திகதியில் துரித அனர்த்தங்களுக்காக செலவு செய்தல்**

| விபரம் | குடும்ப/ஆட்களின் எண்ணிக்கை | செலவு மி.ரூ |
|---|---|---|
| சமைத்த உணவு (ஆட்கள்) | 200904 | 45.64 |
| உலர் நிவாரணம் (குடும்பங்கள்) | 278562 | 72.27 |
| மரண உதவிகள் (ஆட்கள்) | 138 | 2.07 |
| மருத்துவ உதவி (ஆட்கள்) | 13 | 0.10 |
| சுயதொழில் உதவி (ஆட்கள்) | 9 | 0.041 |
| தொழில் உபகரணங்கள் (ஆட்கள்) | 1 | 0.003 |
| சமையலறை உபகரணங்கள் (குடும்பங்கள்) | 8646 | 12.98 |

மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்**

*2012 டிசெம்பர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிவாரணம் வழங்குவதன் பொருட்டு 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கான செலவு இதில் உள்ளடங்குகின்றது.

**வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்குதல்**

2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் ஏற்பட்ட உலர் காலநிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடி நீர் வழங்குவதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் ஆலோசனைக்கமைவாக அம்பாறை, பதுளை, மட்டக்களப்பு, கம்பஹ, யாழ்ப்பாணம், கண்டி, கிளிநொச்சி, குருநாகல், மாத்தளை, மொனறாகலை, முல்லைத்தீவு, பொலொனறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு 12.04 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதன் மூலம் சாதாரண மக்களின் வாழ்வினை பேணிச் செல்வதன் பொருட்டு தேவைப்படுகின்ற குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் 201985 பேரின் வாழ்க்கையினைப் பாதுகாப்பானதொன்றாக மாற்றியமைக்க முடிந்தது. இதன் பொருட்டு செலவிடப்பட்ட மொத்தத் தொகை 6.26 மில்லியன் ரூபாவாகும்.

துரிதமாக அனர்த்த நிவாரணங்களை வழங்குவதன் மூலம் அனர்த்தங்களுக்கு பின்னரான சந்தர்ப்பங்களில் மக்களின் சிவில் வாழ்வுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க முடிந்துள்ளது. அதன்படி அனர்த்தங்களுக்கு உள்ளான பொது மக்களின் அன்றாட வாழ்க்கையினை இடையறாது பேணிச்செல்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் உரிய

பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அனர்த்த நிலைமை தணிந்து மக்கள் வாழ்வு வழமை நிலைமைக்கு வரும் வரை அவர்களுக்கு அத்தியாவசியமான நிவாரணங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி மீது அவர்களின் பங்களிப்பு குற்றுயிராகாதிருப்பதற்கும் அவர்களின் உள ரீதியான அபிவிருத்தி ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

**வீடமைப்பு நிவாரணம் வழங்கப்படுதல்**

2013.07.04 ஆம் திகதி வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 152(I) பிரகாரம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டு வீட்டுச் சேதங்களுக்காக செலுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டு 425 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது. மேற்படி நிதியில் 344 மில்லியன் ரூபா 22 மாவட்டங்களில் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. அனர்த்தத்தினால் பாதிக்கப்படுகின்ற வீடுகளைத் திருத்துவதற்காக அல்லது மீள நிர்மாணிப்பதற்காக இந்நிவாரணம் வழங்கப்படுவதோடு அதற்காக பயனாளியின் மாதாந்த வருமானம் 3000ரூபா அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.அந்த வகையில் முழுமையாக சேதமடைந்த வீடொன்றுக்காக 100,000 ரூபாவும் பகுதியளவில் சேதமடைந்த வீடொன்றுக்காக 50,000 ரூபாவும் செலுத்தப்படும்.


வீடமைப்பு நிவாரணங்களுக்கான நிதியின் பெறுமதி (மில்லியன் ரூபா) – 2013

| மாவட்டம் | வழங்கப்பட்ட நிதியின் அளவு (மி.ரூ) | முழுமையாக சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை | பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை | செலவு மி.ரூ |
|---|---|---|---|---|
| அம்பாறை | 9.21 | 32 | 295 | 8.98 |
| அநுராதபுரம் | 8.19 | 53 | 135 | 2.35 |
| பதுளை | 11.09 | 26 | 536 | 10.24 |
| கொழும்பு | 1.24 | 3 | 48 | 0.94 |
| காலி | 12.42 | 49 | 462 | 10.74 |
| கம்பஹ | 2.10 | 7 | 87 | 2.04 |
| அம்பாந்தோடடை | 79.88 | 373 | 940 | 55.67 |
| யாழ்ப்பாணம் | 15.47 | 46 | 1346 | 15.44 |
| களுத்துறை | 9.80 | 32 | 412 | 9.60 |
| கண்டி | 15.57 | 45 | 673 | 14.58 |
| கேகாலை | 4.21 | 16 | 115 | 3.74 |
| கிளிநொச்சி | 40.69 | 22 | 730 | 29.97 |
| குருநாகல் | 50.72 | 440 | 594 | 34.22 |
| மன்னார் | 3.90 | 18 | 42 | 3.90 |
| மாத்தளை | 51.40 | 248 | 1147 | 38.46 |
| மாத்தறை | 16.43 | 205 | 129 | 15.75 |
| மொனறாகலை | 8.22 | 42 | 530 | 8.16 |
| முல்லைத்தீவு | 41.95 | 28 | 783 | 41.95 |
| நுவரெலியா | 2.35 | 8 | 186 | 1.98 |
| பொலொனறுவை | 17.36 | 352 | 166 | 17.27 |
| இரத்தினபுரி | 15.54 | 88 | 271 | 14.19 |
| திருகோணமலை | 7.26 | 9 | 329 | 4.00 |
| மொத்தம் | 425.00 | 2142 | 9956 | 344.19 |


மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள**








மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள**




மாவட்ட வாரியாக வீட்டுச் சேதங்களின் எண்ணிக்கை

மேலே காட்டப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டு 22 மாவட்டங்களில் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்ட வீட்டுச் சேதங்கள் 2142 க்காகவும், பகுதியளவான வீட்டுச் சேதங்கள் 9956 க்காகவும் 344.16 மில்லியன் ரூபா செலவிட்டு வீடுகளை வழமை நிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் மீள் நிர்மாணம் செய்யப்படுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது அனர்த்தங்களின் காரணமாக வீடுகள் பாதிக்கப்பட்டு உரிய பாதுகாப்பும் சமூகப் பாதுகாப்புத் தன்மையும் அற்றிருந்த 12098 குடும்பங்களின் வாழ்வினை வழமை நிலைமைக்குக் கொண்டுவர முடிந்தது.


**இயற்கை அனர்த்தங்களுக்காக நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுதல்**

2006 தொடக்கம் 2013 வரை இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களின் தகவல்கள்

| வருடம் | வெள்ளம் | வறட்சி | சூறாவளி | மண்சரிவு |
|---|---|---|---|---|
| ***2006** | 112947 | 47925 | 827 | 2053 |
| **2007** | 211318 | 93316 | 6647 | 10902 |
| **2008** | 1018080 | 106912 | 356790 | 2068 |
| **2009** | 217935 | 226835 | 15736 | 508 |
| **2010** | 533713 | 131168 | 9422 | 140 |
| **2011** | 1514666 | 69507 | 2345 | 1430 |
| **2012** | 558063 | 920684 | 2387 | 277 |
| **2013** | 132646 | - | 16466 | 36 |

மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்**

**(* 2006 ஆம் ஆண்டு தரவு அலகு குடும்பங்களாக காட்டப்பட்டுள்ளது.)**




மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்**

**மில்லியன் ரூபா**

2006 தொடக்கம் 2013 வரை இயற்கை அனர்த்தங்களுக்காக நிதி ஏற்பாடுகளை விடுவித்தல் (மி.ரூ)

| வருடம் | வெள்ளம் | வறட்சி | மண்சரிவு | சூறாவளி |
|---|---|---|---|---|
| 2006 | 143.3 | 15.1 | 4.6 | 10.2 |
| 2007 | 159.1 | 19.9 | 22.5 | 17.6 |
| 2008 | 210.3 | 15.2 | 20.5 | 11.6 |
| 2009 | 202.6 | 31.1 | 4.9 | 43.8 |
| 2010 | 244.0 | 16.3 | 3.25 | 8.6 |
| 2011 | 589.8 | 12.8 | 34.3 | 20.9 |
| 2012 | 113.9 | 58.5 | 0.67 | 3.8 |
| | 118.4 | - | 0.18 | 8.2 |

மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்**

அதிகளவான இயற்கை அனர்த்தங்களுக்காக 2011 ஆம் ஆண்டு 658 மி.ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 23 மாவட்டங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய வெள்ளம் இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. இதன் காரணமாக 69 உயிர்ச் சேதங்கள் இடம்பெற்றதோடு 1514666 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டனர். கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் இயற்கை அனர்த்தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவதற்கான காரணம் காலநிலை மாற்றத்தின் காரணமாக இடம்பெறுகின்ற இயற்கை அனர்த்தங்கள் குறைவடைந்தமையும் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்ட அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், முன்கூட்டிய தயார் நிலை மற்றும் விழிப்பு நிலை என்பவையாகும்.

## நிவாரணப் பொருட்களை விநியோகித்தல்

**அனர்த்தங்களுக்காக பிரதான நிவாரணப் பொருட்களை விநியோகித்தல் 2006 தொடக்கம் 2013 வரை**

| பொருட்கள் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சமையலறை உபகரணப் பொதிகள் | 1000 | 1144 | 288 | 6 | 1030 | - | 615 | 1735 | **5818** |
| கூரைத் தகடுகள் | - | - | - | - | 280 | 315 | 1318 | 5577 | **7490** |
| மின் பிறப்பாக்க இயந்திரங்கள் | 4 | - | - | 15 | 55 | 6 | 33 | 51 | **164** |
| காஸ் சிலிண்டர்கள் ( கி.கி12)/அடுப்புகள் | - | - | 10 | - | - | - | 786 | 36 | **996** |
| நீர் விநியோக முறைமைகள் | - | - | - | - | 28 | 338 | - | - | **366** |
| நீர் மோட்டர்கள் | - | - | 15 | - | 22 | 34 | 272 | - | **343** |
| கூடாரங்கள் | 1791 | 631 | 428 | 106 | 462 | 1337 | 608 | 923 | **6286** |
| மண்ணெண்ணை அடுப்புகள் | | | | | | | | 440 | **440** |

மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம**

அனர்த்தங்களுக்காக பிரதான நிவாரணப் பொருட்களாகிய சமையலறை உபகரணப் பொதிகள், கூரைத் தகடுகள், மின் பிறப்பாக்க இயந்திரங்கள், கூடாரங்கள், காஸ் அடுப்புகள் / சிலிண்டர்கள் மற்றும் மண்ணெண்ணை அடுப்புகள் விநியோகிக்கப்படும்போது 2013 ஆம் ஆண்டு கம்பஹ, புத்தளம், கொழும்பு, அம்பாந்தோட்டை, கண்டி, பதுளை, அநுராதபுரம், மட்டக்களப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, குருநாகல், மன்னார், மாத்தளை, மொனறாகலை, முல்லைத்தீவு, நுவரெலியா, பொலொனறுவை, வவுனியா மற்றும் இரத்தினபுரி ஆகிய பத்தொன்பது மாவட்டங்கள் பயனாளி மாவட்டங்களாக அமைந்தன. கடந்த 4 வருட காலப்பகுதியில் பிரதான நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படுதல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது சமையலறை உபகரணப் பொதிகள், கூரைத் தகடுகள்,மற்றும் ஏனைய பொருட்களுக்கான அதிக விநியோகம் 2013 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

சீனா, கொரியா, ஜப்பான், பாக்கிஸ்தான், இத்தாலி, ரசியா, மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து அனர்த்த நிவாரணப் பொருட்களும் உபகரணங்களும் கடந்த எட்டு வருட காலப்பகுதியில் கொடையாக இந்த அமைச்சுக்குக் கிடைத்ததோடு தேவையின் அடிப்படையில் அவை மாவட்டங்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேற்படி பொருட்களுக்கு மேலதிகமாக அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு, குடிநீர், மெத்தை விரிப்புகள், பாய்கள், உயிர்காப்பு கோட்கள், துவாய்கள், பெரியவர் மற்றும் சிறியவர்களுக்கான ஆடைகள், ப்ளாஸ்ரிக் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு தேவையின் அடிப்படையில் வழங்குவதற்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஏனைய நடைமுறை கருத்திட்டங்கள்.•. நிகழ்ச்சித்திட்டங்கள்

## மழை நீர்த் தாங்கிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

வறட்சிக் காலங்களில் பாதிக்கப்படுகின்ற மக்களின் குடி நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதன் ஊடாக மழைக் காலங்களில் கிடைக்கும் நீரை சேகரித்து நீர பற்றாக்குறையுள்ள காலப் பகுதியில் பயன்படுத்துவதற்காக மழை நீர்த் தாங்கிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் 2006 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அதன் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் 2013 ஆண்டு தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒருங்கமைவாக மழை நீர்த் தாங்கிகளை நிர்மாணித்தல் பொலொனறுவை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைபடுத்தப்பட்டது. இதன் மூலம் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு மழை நீரை முகாமை செய்து கொள்வதற்கும், தூய குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிலைமையின் காரணமாக மேற்படி பிரதேசங்களில் சடுதியாக பரவிவருகின்ற சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவதற்கு பங்களிப்பு கிடைத்துள்ளது.





### பொலொனறுவை மாவட்டம

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | நிர்மாணிக்கப்பட்ட மழைத் தாங்கிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு மி.ரூ | நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை மி.ரூ | நிதிசார் முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| 1 | வெலிகந்த | 12 | 0.72 | 0.67 | 100மூ | 100மூ |
| 2 | திம்புலாகல | 12 | 0.72 | 0.71 | 100மூ | 100மூ |
| 3 | ஹிங்குரக்கொடை | 12 | 0.72 | 0.71 | 100மூ | 100மூ |
| 4 | எலஹெர | 12 | 0.72 | 0.71 | 100மூ | 100மூ |
| | **மொத்தம்** | **48** | **2.87** | **2.80** | **100மூ** | **100மூ** |

### திருகோணமலை மாவட்டம்

மூலம் : **தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம**

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | நிர்மாணிக்கப்பட்ட மழைத் தாங்கிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு மி.ரூ | நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை மி.ரூ | நிதிசார் முன்னேற்றம்% | பௌதீக முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|---|
| 1 | பதவிஸ்ரீபுர | 11 | 0.74 | 0.74 | 100மூ | 100மூ |
| 2 | கோமரண்கடவல | 11 | 0.74 | 0.74 | 100மூ | 100மூ |
| 3 | மொரவெவ | 11 | 0.74 | 0.74 | 100மூ | 100மூ |
| | **மொத்தம்** | **33** | **2.23** | **2.23** | 100மூ | 100மூ |

| தொடர் இலக்கம் | மன்னார் பிரதேச செயலாளர் பிரிவு | நிர்மாணிக்கப்படும் செய்கை கிணறுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு மி.ரூ | நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை மி.ரூ | நிதிசார் முன்னேற்றம்% | பௌதீக முன்னேற்றம்% |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாந்தை –மேற்கு | 32 | 3.24 | 3.24 | 100% | 100% |

**தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையதினால் வழங்கப்பட்ட உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கிணறுகள்**





இக்கிணறுகள் குடிநீர்த் தேவை, விவசாய நடவடிக்கைகள் மற்றும் அன்றாடத் தேவைகள் என்பவற்றுக்காக பயன்படுத்தப்படுவதனால் அது இடம்பெயர்ந்த மக்களின் சமூக மற்றும் பொருளாதார மட்டத்தை முன்னேற்றுவதற்கு பேருதவியாக அமைந்துள்ளது.

நிர்மாணிக்கப்பட்ட செய்கைக் கிணறுகளைப் பயன்படுத்துவதன் மூலம் செய்கை மேற்கொள்ளப்படும் விதம்.





செய்கைக் கிணறுகளை நிர்மாணித்ததன் மூலம் மன்னார் மாவட்டமானது வறண்ட வலயத்தில் அமைந்திருப்பதன் விளைவாக மக்களின் நீர்த் தேவையை நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

அதன்படி மன்னார் மக்களின் விவசாய நடவடிக்கைகளை முன்னேற்ற முடிந்துள்ளது. அதன் மூலம் அவர்களது பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளதோடு அவர்களின் நாளாந்த போஷாக்குத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ள முடிந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காகவும் இக்கருத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது.



மக்களின் பொருளாதாரம் வலுப்பெற்றிருப்பதன் மூலம் தனிநபர் வருமான மட்டத்தை உயர்த்த முடிந்துள்ளது. நடப்பு அரசாங்கத்தின் ஓர் இலக்காகிய வீட்டுத் தோட்ட அபிவிருத்தியின் மூலம் மக்களின் உணவுத் தேவையை வீட்டுத் தோட்டத்தின் மூலமே நிறைவேற்றிக்கொள்வதற்கும், உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்பெறச்செய்வதற்குத் தேவையான கிராமிய மக்களின் பங்களிப்பினை முழுமையாகப் பெற்றுக் கொளவதற்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முடிந்துள்ளது.

√ **தகவல் தொழில்நுட்பச் செயன்முறை**

**இணையத்தள தகவல் முறைமையின் மூலம் அனர்த்தம் இடம்பெற்று குறுகிய காலத்தில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்**

**□சஹன□(நிவாரணம்) அனர்த்த முகாமைத்துவ முறைமை**

இலங்கை தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் முகவராலயத்தின் அனுசரணையோடு அரச துறையை மீளமைப்பதற்கான கருத்திட்டத்தின் ஊடாக □சஹன□ அனர்த்த முகாமைத்துவ முறைமையுடன் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் மாவட்ட மற்றும் பிரதேசச் செயலகங்கள் வலைப் பின்னல்களாக்கப்பட்டு வருகின்றன. இந்த வலையமைப்பின் நோக்கமானது திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக அனர்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்மிகு தொடர்பாடல் முறைமையை ஏற்படுத்திக் கொள்வதாகும். நிவாரண மற்றும் புணர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்படுதல், நடைமுறைபடுத்தப்படுதல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுதல் என்பவற்றுக்காக இத்தகவல்களைப் பயன்படுத்தலாம். இந்த முறைமையை நாடுதழுவிய ரீதியில் வெற்றிகரமாக நடைமுறைபடுத்தும் பொருட்டு 25 நிருவாக மாவட்டங்களினுள் 25 மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காகவும் பிரதேச செயலகங்களில் உள்ள அபிவிருத்தி உத்தியொகத்தர்களுக்காகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது இது நாடு பூராகவும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையதினால புத்தளம், மொனறாகலை, நுவரெலியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மாத்தளை, பொலொனறுவை, காலி, களுத்துறை, கம்பஹ, கொழும்பு, அநுராதபுரம், அம்பாரை, யாழ்ப்பாணம், மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவடடங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சகல அபிவிருத்தி உதவியாளர்( அனர்த்த முகாமைத்துவ ) உத்தியொகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (அனர்த்த நிவாரண சேவைகள்) என்போருக்காக அனர்த்த நிவாரண சேவைகளை வழங்குதல், நிவாரண மென்பொருள் ஊடாக தகவல்களை அறிக்கையிட வேண்டிய விதம் மற்றும் மாதிரிப் படிவங்களின் படி அறிக்கையிடல் தொடர்பாக பயிற்சியளித்துள்ளதோடு சகல மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களுக்காகவும் இது தொடர்பாக ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்





## சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமையில் அதற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்காக கிராமிய மக்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் கிராமிய மக்கள் அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக விழிப்பூட்டல் மேற்கொள்ளப்படுகின்றன.

நடைமுறைபடுத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 2013

| தொடர் இலக்கம் | மாவட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அம்பாறை | 4 |
| 2 | அநுராதபுரம் | 4 |
| 3 | காலி | 5 |
| 4 | யாழ்ப்பாணம் | 10 |
| 5 | கேகாலை | 2 |
| 6 | இரத்தினபுரி | 4 |
| 7 | புத்தளம் | 1 |
| 8 | மாத்தறை | 4 |
| 9 | நுவரெலியா | 1 |
| **மொத்தம்** | | 35 |



அனர்த்தத்திற்குப் பின்னரான முகாமைத்துவம் தொடரபாக மக்களை விழிப்பூட்டுவதன் மூலம் அனர்த்தமொன்றின் போது அவர்களின் உயிர் மற்றும் சொத்து என்பவற்றுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைத்துக்கொண்டு உள ரீதியல் வலுவாக அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல் வளர்ச்சியடைவதோடு குறகிய காலத்தில் அவர்களை பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியாக வழமை நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான பின்னணியை உருவாக்க முடிந்துள்ளது.

இங்கு குறிப்பாக பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்காக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அறிவினைப் பெற்றுக்கொடுத்தலும் அவர்கள் இடர்களுக்கு முகங்கொடுப்பதற்காக உடல் மற்றும் உள ரீதியாக தயாரிக்கப்படுதலும் இடம்பெறுகின்றது. அதேவேளை அவர்கள் சமூகத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செய்தியை கொண்டு செல்கின்ற தொடர்பாடலாளர்களாகவும் செயற்படுவார்கள். அனர்த்த நிலைமையின் போது மிகவும் பாதுகாப்பாகவும் உள ரீதியாக பாதிக்கப்படாதவாறும் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய விசேட நபர்களாக சிறுவர்களைக் கருதலாம். அதன்படி அனர்த்தங்கள் தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளின் அறிவு மிக முக்கியமாகும். அதன் மூலம் அவர்கள் அனர்த்தத்திற்குப் பின்னரான சந்தர்ப்பங்களுக்கு நன்கு முகங்கொடுக்கக்கூடியவர்களாக மாறுவதுடன் பின்னர் ஏற்படும் அதிர்ச்சிகளுக்கும் இரையாவதைத் தடுத்தும் கொள்ளலாம்.





**சவால்கள்**

- பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குப் போதுமான ஒதுக்கீடுகள் இன்மை.
- அனர்த்த நிவாரண சேவை நடவடிக்கைகள் பல்தரப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதால் நிறுவனங்கள் ஒரே பணியை மேற்கொள்ளுதல்.

**எதிர்காலத் திட்டங்கள் (2014)**

- தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்காக 2014 ஆம் ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 152(I)இன் பிரகாரம் துரித நிவாரணம் வழங்கப்படுதல், சேதமாகிய வீடுகளை மறுசீரமைத்தல் மற்றும் வீழ்ச்சியடைந்த வாழ்வாதார வழிகளை கட்டியெழுப்புவதற்காக நிவாரணம் வழங்குதல்.
- பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிவாரண சேவைப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய பட்டதாரிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாகவும் நிவாரண சேவைப் பணிகளை வினைத்திறனாகவும் முறையாகவும் நிறைவேற்றுவது தொடர்பாகவும் அடிப்படை விழிப்பூட்டல் பயிற்சிச் செயலமர்வுகளை நடத்தாத மாவட்டங்களில் அவற்றை நடத்துதல்.
- பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களின் மூலம் கிராமிய அனர்த்த நிவாரண சேவை குழுக்களைத் தாபித்தல் மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பது தொடர்பாக கிராமிய மக்களையும்,பாடசாலைப் பிள்ளைகளையும் விழிப்பூட்டுதல் மற்றும் அது தொடர்பாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைபடுத்துதல்.
- அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமையின்போது நிவாரண சேவைப் பணிகளை வினைத்திறனாகவும் பயனுள்ளவாறும் நடைமுறைபடுத்துவதற்குத் தேவையான சரியான தரவுகளையும் தகவல்களையும் அனர்த்தம் இடம்பெற்று குறுகிய காலத்தில் அறிக்கையிடுவதற்காக தாபிக்கப்பட்ட நிவாரண மென்பொருளை நாடுதழுவிய ரீதியில் நடைமுறைபடுத்துதல் மற்றும் அதற்காகத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்ட மட்டத்தில் உருவாக்குதல்.
- வறட்சியின் காரணமாக குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் துன்பப்படுகின்ற மக்களுக்கு மேற்படி துன்பத்தை குறைத்துக்கொள்வதற்காக மழை நீர்த் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டங்களை நடைமுறைபடுத்துதல்
- அனர்த்த நிவாரணங்களை வழங்கும்போது உரிய பயனாளிக்கே நிவாரணம் கிடைக்கின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்காக GPS மற்றும் GIS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீடமைப்பு நிவாரணங்கள் வழங்கப்பட்ட பயனாளிகள் தொடர்பாக வரைபடங்களில் உள்ளடக்குவதன் மூலம் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முறையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்ளப்படுதல்.

**தடைகள்**

- அனர்த்த நிவாரணச் சேவை நடவடிக்கைகள் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதால் ஒரே பணி பல நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுதல்.
- புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.
- அவர்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்

**தடைகளை குறைப்பதற்கான உபாய மார்க்கங்கள்**

- அனர்த்த நிவாரணச் சேவை நடவடிக்கைகளை ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டுவருதல்
- அனர்த்த நிவாரணச் சேவை நடவடிக்கைகள் தொடர்பாக செயல்முனைப்புடன் பங்களிப்பு நல்கின்ற நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதற்காக செயற்பாட்டுப் பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

- நிதியுதவியளிப்பதன் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.